476

# வைத்தியக் களஞ்சியம்

மலர்-1 இதழ்-3

1921-ம் ௵ அக்டோபர் ௴

JL
LCm21197,N21k
N21
169987

476

தமிழ்

# வைத்தியக் களஞ்சியம்

தமிழ் சித்த வைத்திய மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 1 | 1921-ம் வரு அக்டோபர்மீ<br>1097-ம் வரு புரட்டாசிமீ | இதழ் 3 |
|---|---|---|



வைத்திய ஆசிரியர்

கா. பு. மு. காதர்முகையதீன் இராவுத்தர்,

பத்திராதிபர்,

பேட்டை, திருநெல்வேலி.


18


வருட சந்தா ரூபா. 3    வெளிநாடுகளுக்கு ரூபா. 4


காப்பி ரைட் ரிஜிஸ்டெர்ட்.

மெத்தாசிரி அச்சுக்கூடம், பாளையங்கோட்டை.

1- NOV

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நாடி | 45—48 |
| 2. | கடிதங்கள் | 49—56 |
| 3. | தமிழ்நாட்டு வைத்தியர்களே கண்விழியுங்கள் | 57—60 |
| 4. | வைத்தியச்சுவடிகளின் பெயர்கள் | 61—65 |
| 5. | வைத்திய அகராதி | 66 |
| 6. | அகத்தியர் ஆயிரத்திரட்டு (முதற்காண்டம்) | 17—24 |


## சந்தா நேயர்களுக்கோர் விண்ணப்பம்

நமது தமிழ் வைத்தியக்களஞ்சிய சந்தாதார்கள் தாங்கள் சந்தா பாக்கியை உடனே அனுப்பி பத்திரிகையை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். பொருள் செலவிட்டே உலகத்தில் சகல காரியமும் நடக்கவேண்டியதிருக்கிறதென்பதை நமது சந்தா நேயர்களுக்கு எடுத்துக்காட்டவேண்டியதில்லை. நமது பத்திரிகை யானேஜாவர்கள் வீட்டில் கலியாணம் வந்ததாலும், காகிதம் உரியகாலத்தில் கைக்கெட்டாததாலும், இன்னும் சில அசந்தற்பத்தாலும், குறித்த காலத்திற்குள் வெளிவரப்பின்தின. இனி அவ்விதம் நிகழாவண்ணம் உயிருக்குயிராய்த் திகழும் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

பத்திராதிபர்.

# மதிப்புரை

## சதுரகிரிப் புராணம்

இப்பெயர்கொண்ட புராணம் ஒன்று என் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதை அனுப்பிய அன்பருக்கு எமது வந்தனத்தைத் தெரியப்படுத்துகின்றோம். மேற்படி புராணத்தில் தமிழ் சித்த புருஷர்களின் வரலாறுகளையும் அவர்களியற்றிய நூல்களையும் அவர்களிடம் மருந்துகற்ற வடநாட்டு முனிவர்களின் வரலாறுகளையும் சதுரகிரி தல மகிமைகளையும் இனிது விளக்கப்பட்டிருக்கிறது.

சித்தர்கள் வரலாறுகளையும் அவர்களியற்றிய நூல்களின் தொகுப்புகளையும் தெளிவுபடுத்திச் சொல்லக்கூடிய நூலொன்றில்லை யென்று கவலையுற்றிருந்த தமிழுலகம் இச்சதுரகிரி புராணத்தைக் கண்டு மகிழ்ச்சியுறுமென்று நினைக்கின்றோம்.

தமிழ் வைத்தியத்தைச் சீர்திருத்தி பிரபலப்படுத்த முயற்சித்துவரும் இக்காலத்தில் இதனை வெளியாரதனையும் ஒவ்வொரு வைத்தியரிடமும் மற்ற தமிழ் மக்களிடமும் இருக்க வேண்டியதாகையால் இச்சதுரகிரி புராணம் வெளியிடப்பட்டதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த அருமை பெருமை வாய்ந்த நூலை ஒவ்வொரு தமிழ் மக்களும் வாங்கி வாசிக்கவேண்டுமென விரும்புகிறோம்.

டெம்மி 1 x 8 சைஸ் 850 பக்கங்களுள்ளதாய் அழகிய காலிகோ பயிண்டு கட்டப்பட்டிருக்கிறது.

வேண்டுவோர் மதுரை புதுமண்டபம் புத்தகஷாப் ஸ்ரீ இராமசாமி கோனாரவர்களிடம் ரூ. 3-க்கு பெற்றுக்கொள்ளலாம்.

உடலிலுள்ள தத்துவங்களில் எந்தத் தத்துவம் மாறுபடுகிறதோ அந்தத் தத்துவம் பற்றிநிற்கும் சடபாகமும் மாறுபடும். அதையே நோயென்று சொல்லப்படுமென்பதுதான் தமிழ் மருத்துவ நூலாசிரியர்களான சித்தர்களின்கொள்கை. இதை யனுசரித்தே வாதம், பித்தம், ஐயம், என்னும் நாடித் தத்துவங்களைக்கொண்டு நோயறியும் வழிகளைச் சொல்லியிருப்பதோடு மருந்துமுறைகளையுஞ் சொல்லியிருக்கிறார்கள். எப்படியென்றால்,—

— உலகிலுள்ள எல்லாப் பொருட்களுக்கும் பஞ்ச பூதங்களே காரணமாகும். ஒவ்வொரு பொருட்களிலும் ஒவ்வொரு பூதக் கூறு அதிகமாகவும் மற்ற பூதங்களின் கூறுகள் குறைவாகவும் இருப்பது இயற்கை. ஒவ்வொரு பூதத்தின் தத்துவம் அப்பூதத்தின் சடபாகத்தைத் தழுவி நிற்குமாதலால் உடலிலுள்ள தத்துவங்களில் எந்தப்பூதத்தின் தத்துவம் மாறுபடுகிறதோ அந்தப் பூதத்தின் சடபாகமே நோய்வாய்ப்படும்.

எந்தப் பூதத்தின் தத்துவம் மாறுபடுகிறதோ அந்தப் பூதத்தின் சடபாகமே நோய்வாய்ப்படும் என்று நாம் மேலே சொன்னோம். அந்த நோய்களுக்கு அப்பூதக்கூறை சமப்படுத்தும் பூதச் சரக்குகளையே மருந்துச் சரக்குகளாக எடுத்துச் செய்முறைகளையும் உபயோகிக்கு முறைகளையும் சித்தர்கள் தங்கள் மருத்துவ நூற்களிற் சொல்லியிருக்கின்றனர். அந்த பாகப்படி மருந்து செய்துண்ணில் மாறுபட்ட தத்துவமும் அதனால் சடபதார்த்தத்திற்கு ஏற்பட்ட நோய்களும் நலம்பெற்று சமநிலை யடையும். இதுவே தமிழ்ச் சித்த வைத்தியத்தின் மூலக் கொள்கை. நிற்க,

"சரீர தத்துவத்தைப்பற்றி தமிழ் மருத்துவ நூற்களிற் சொல்லப்பட்டிருப்பது சொற்பமென்றும், அதுவும் ஒழுங்காகவும் திருஷ்டாந்த பூர்வமாகவும் சொல்லப்பட்டிருக்கவில்லை



என்றும் தமிழ் சித்த வைத்தியர்களுக்கு சரீர தத்துவப் பயிற்சி கிடையாதென்றும், மேனாட்டு வைத்தியர்கள் குறைகூறிவருகிறார்கள். தமிழ் மருத்துவ நூற்கள் சரீர தத்துவத்தை எந்த ஆதாரத்தின்பேரில் சொல்லியிருக்கின்றன; அந்த ஆதாரஞ் சரியான ஆதாரந்தானா என்று ஆராய்ச்சிசெய்து குற்றங்கண்டு அவர்கள் குறைகூறுவதாக நமக்குத் தெரியவில்லை. அவர்கள் கூறும் சரீர தத்துவ வழி வேறு. தமிழ் வைத்திய சரீர தத்துவ வழி வேறு. இதின் பாகுபாடறியாமற் குறைகூறுவதாகத் தெரிகிறது. அதை விளக்குவாம்.—

உடலிலுள்ள மாமிசம், இரத்தம், எலும்பு, நரம்பு, தோல் முதலிய சடப்பதார்த்தங்களின் அமைப்பு, வடிவம், சந்தி, தொழில் முதலியவைகளை விரிவாகச் சொல்லியிருப்பது மேனாட்டு வைத்திய சரீர தத்துவம் அதுவன்றி மேலேகண்ட சடப்பதார்த்தங்களை ஆட்டிவைக்கும் சக்தியாகிய தத்துவங்களைப்பற்றி ஆராய்ச்சிசெய்திருப்பது அற்பத்திலும் அற்பமே.

தமிழ் மருத்துவ நூற்கள் சரீர தத்துவங்களைப்பற்றி மிகவும் விரிவாக எழுதப்பட்டிருப்பதுடன் சடப்பதார்த்தங்களைப் பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டிய அளவு சொல்லப்பட்டிருக்கின்றன. உடலிலுள்ள சடப்பதார்த்தம் மாறுதலடைந்திருப்பதைக் காணுவதற்கு உபயோகித்துவரும் கருவிவழியாய்க்கண்டு நலப்படுத்துவது மேனாட்டு வைத்திய முறை. காரணமாகிய தத்துவம் மாறுபட்டிருப்பதை நாடிவழி கண்டு சடப்பதார்த்த நோயை தீர்மானித்து நலப்படுத்துவது தமிழ் நாட்டு வைத்திய முறை. இங்கோர் உதாரணங் காட்டுவாம்.—

பித்தப் பாண்டு ஒருவனுக்கு வந்தால் அதைக் குத்தித் தண்ணீரெடுப்பது மேனாட்டு வைத்திய முறை. அது இரத்தத்தின்

தத்துவம் கெட்டு வந்ததென்று அயக்காந்தம் முதலிய மருந்துகளால் குணப்படுத்துவது தமிழ் நாட்டு வைத்தியமுறை. ஆகவே மேனாட்டு வைத்தியச் சரீர தத்துவமுறை சடப்பதார்த்த வழியென்றும், தமிழ் வைத்தியச் சரீர தத்துவ முறை தத்துவவழியென்றும், ஒவ்வொன்றும் தாமெடுத்துக்கொண்ட ஆதாரத்தை ஒட்டியே மற்ற விஷயங்களைச் சொல்லியிருக்குமென்றும், ஒன்றையொன்று தழுவியதாகாதென்றும் அதது எடுத்துக்கொண்ட ஆதாரங்களுக்கு அதின்வழி நூற்கள் ஒத்திருக்கிறதாவென்று பார்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, மேனாட்டு தத்துவ சாஸ்திரங்களுக்குத் தமிழ் வைத்திய தத்துவ சாஸ்திரம் ஒத்திருக்க வேண்டுமென்று சொல்வது சைவ சித்தாந்த நூலிற் கிறிஸ்துநாதரின் ஜீவிய சரித்திரம் இருக்கவேண்டுமென்று சொல்லுவது போலாம்.

மேனாட்டு வைத்திய மருந்து முறைகள் உடலிலுள்ள ஒவ்வொரு சடபதார்த்தங்களையும் வளர்க்கவோ குறைக்கவோ சக்தியுள்ள பதார்த்தங்களால் தனித்தனி மருந்துகளைச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழ் வைத்தியம் தனிமுறையென்றும், அது சமயத்தையும் ஞானத்தையும் பற்றிநிற்கு முறையென்றும், அது உலக சிருஷ்டியின் கிரமப்படி வகுக்கப்பட்ட முறையென்றும், இந்தியர் ஆத்ம ஞானமுள்ளவர்களாகையால் அவர்கள் வைத்திய முறையும் அந்த முறைவழி சொல்லப்பட்டிருக்கிறதென்றும் இனியாவது அறிந்துகொள்வார்களாக.

(தொடரும்).

பத்திராதிபர்.

# கடிதங்கள்

மாயவரம்.
2—10—21.

தமிழ் வைத்தியக் களஞ்சிய மானேஜர் வைத்திய ஆசிரியர் ஜனாப். உ. சி. ப. பய்யதீன் இராவுத்தர் அவர்கட்கு.

ஐயா,

தங்கள் அக்டோபர் மாதத்திய தமிழ் வைத்தியக் களஞ்சியத்தில், எனக்கும் கோவிற்பட்டி தமிழ்வைத்திய சங்க அமைச்சர் கனம். சிவஞ்ஞான யோகியவர்கட்கும் கண்காட்சி சம்மந்தமான மெடல் கொடுக்கும் விஷயமாய் சில தகவல்கள் ஏற்பட்டிருப்பதால் இதுடன் எழுதியனுப்பியுள்ள கடிதத்தை வெளிப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள் காலது ஆவணி மாதத்திய தமிழ் வைத்தியக் களஞ்சியத்தில் பேட்டை தமிழ் சித்த வைத்திய சங்கத்தார் செய்த தீர்மானங்களையும், திருநெல்வேலி இந்து காலேஜில் கோவிற்பட்டித் தமிழ் வைத்திய சங்கத்தாரால் கூட்டப்பட்ட தமிழ் வைத்திய மகா நாட்டாரால் தீர்மானித்தபடியல்லாது வேறு கூட்டத்தாரால் செய்யப்பட்ட தவறுதல்களையும் கண்ணுற்றேன்.

நான் மேற்கண்ட மகா நாட்டின் மருந்து கண்காட்சிக்கு மருந்து அனுப்பியவர்களில் ஒருவனாதலால் எனக்கு மேற்படி சங்கத்தார் தெரிவித்தபடி எனக்குத் தங்க மெடல் கொடுக்கவில்லையென்பதையும், எனக்கும் மேற்படி சங்க அமைச்சருக்கும் நடந்த விவகாரங்களையும் என்போன்ற தங்க வெள்ளி மெடலுக்குப் பாத்தியப்பட்ட மருந்தனுப்பிய நண்பர்களும் ஏனையோரும் தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் அவாவினால் கீழ்க்கண்ட சில விஷயங்களைத் தெரிவிக்கலானேன்.

முதலில் சங்கத்தார் தீர்மானங்களை அறிந்தும் கண்காட்சிக்கு நான் மருந்து அனுப்புவித்தேன். பிறகு பரிசோதகர்

களால் பரீக்ஷிக்கப்பட்டு மெடல் கொடுப்பதாகத் தீர்மானம்செய்யப்பட்ட வைத்தியர்களில் ஒருவனுகத் தீர்மானிக்கப்பட்டு எனக்குத் தங்க மெடல் கொடுப்பதாக ஷை சங்கத்தாரால் அறிவிக்கப்பட்டு எனக்கு சர்ட்டிபிகேட்டு அனுப்பினர்கள். வெகு நாளைக்குப்பிறகு தங்க மெடல் வரும் வழியைக் காணுததால் பல க[illegible] தங்கள் எழுதிய பின்னர், சங்க அமைச்சர் சிவஞான யோகியவர்கள் தங்க மெடல்செய்ய ரூ. 31 அனுப்பவேண்டுமென், தெரிவித்தார்கள். நான் ஆச்சரியப்பட்டு இப்படித் தீர்மானகளைமாற்றித் தங்கள் சங்கச் செலவில் மெடல் செய்துகொடுக்கமல் என்னைப் பணம்கேட்கும் காரணம் தெரியவில்லை யென். கேட்க அன்னர் எனக்குச் சங்கப் பழக்க வழக்கம் தெரியாதென்றும், B. A. B. L. பரீக்ஷை தேறியவர்களுக்கு கவுன் கவர்மெண்டார் தைத்துக்கொடுப்பது மாணவர் செலவிலேயேதா[illegible] என்றும் நம் சங்கத்தை நாம்தான் கௌரவப்படுத்தவேண்மென்று பலவாறு எழுதியிருந்தார்கள்.

அதற்குப் பதிலாக 24—9—21ல் கீழ்க்கண்டபடி என்னு ஷை அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டது.

சுவாமி விருதை சிவஞான யோகியவர்கட்கு.

யோகிகளே!

தங்கள் 1—9—21வுள்ள கடிதம் கிடைக்கப்பெற்றேன். தாங்கள் அன்புகூர்ந்து என் 26—8—21வுள்ள கடிதத்திற்கு பதில் எழுதியதற்கு மெத்தவந்தனம்.

நான் உலக வழக்கத்தையும் அனுபவத்தையும் தெரியாமல் பலவாறு எழுதிவிட்டதாகவும் நான் எழுதியது நியாயமல்லவென்றும், அரசாங்கத்தார் B. A. B. L., பரீக்ஷையில் தேறியவர்கட்கு கவுன் (நாற்கைச் சட்டை) பெறுவாரிடம் வசூலித்துதான் செய்துகொடுக்கிருர்களென்றும், இந்த விஷயம் எனக்கு தெரியாதுபோல் தங்களுக்குத் தோன்றுகிறதென்றும் வெ சவிஸ்தாரமாக எழுதியிருக்கிறீர்கள். மேற்கண்ட பரீக்ஷைகளில் தேறிய பட்டதாரிகளில் விருப்பமுள்ளவர்கள் மட்டும் ஷை ந[illegible]



யைச் சட்டை தைத்துக்கொள்ளுகிருர்கள். எல்லாரும் தைத்துக்கொள்ளுவதில்லை. மேற்படி சட்டை தைத்துக்கொள்ளாத பரீக்ஷை தேறிய மாணவர்கட்கு B. A. B. L. பட்டத்தைக் கவர்ன்மெண்டார் கொடுக்காமல் பிடுங்கிக்கொள்வதில்லை. ஆதலின் மாணவர்களின் வேண்டுகோள் காரணமாக ஷை சட்டையைத் தைத்துக்கொடுக்கிருர்கள் என்று விளங்கவில்லையா? அப்படித் தைத்துக்கொடுக்கும் அரசாங்கத்தார் வெகுமதியென்று சொன்னதில்லையே! அப்படித் தைத்துக்கொடுக்க முதலில் பணம் வேண்டாமென்றும், பிறகு பணம் வேண்டு மென்றும் சொன்னதில்லையே!! மற்றும் அரசாங்கத்தார் சில பரீக்ஷைகளில் தேறியவர்கட்கு மெடல்செய்துகொடுப்பதாக வெளியிட்டிருந்தால், அரசாங்கத்தார் சொந்தச் செலவிலேயேதான் செய்துகொடுக்கிருர்கள். அப்படிச் செய்யாமல் மெடல்பெறுவோரிடம் பணம்வாங்கி மெடல்செய்து கொடுக்கிருர்களென்று தாங்கள் காண்பிக்கமுடியுமா? முடியாது. ஆகையால் கவுன் தைத்துக்கொடுத்தல் என்ற விஷயம் வேறு. மெடல் செய்து கொடுப்பது என்ற விஷயம் வேறு என்று விளங்கவில்லையா? எனவே தாங்கள் எக்காரணம் பற்றியோ தப்பாகச்செய்யும் காரியத்தைச் சாதிக்க எண்ணி ஒன்றுக்கொன்று பொருந்தாத உதாரணங்களைக் காட்டியிருப்பது "தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்று ஒருவன் நிருபிக்க முன்வந்ததை யொக்கும். மேலும், உலகத்தில் ஏற்படுத்தும் எல்லாக் கண்காட்சிசாலைகளிலும் வெகுமதி கொடுப்பதென்ருல் வெகுமதி பெறுவோரிடம் வசூலித்து அவர்களுக்கு வெகுமதி கொடுப்பதில்லை என்பது உலகப் பிரசித்தமாதலின் உலக வழக்கமும் அனுபவமும் தெரிந்த தங்களுக்கு நான் அதிகமாக எடுத்துரைக்கவேண்டியதில்லை.

தாங்கள் முதலாவதாக வெளியிட்ட "ஆயுர்வேத வைத்திய மகா நாடும் மருந்துக் கண்காட்சியும் [illegible] அடங்கிய சிறுபுத்தகத்தில் 4-வது பக்கத்தில் தங்க மெடல், வெள்ளி மெடல்களைப்பற்றி எழுதியிருப்பது 'வெகுமதிகள்' என்னும் தலைமையின்கீழ் எழுதப்பட்டிருக்கிறது. ஷை 'வெகுமதிகள்'

169987
[illegible] -600 008

என்று எழுதியிருப்பது அச்சுப்பிழை யென்று சொல்ல இட மில்லை யென்று நினைக்கிறேன். ‘வெகுமதிகள்’ என்னும் பதத் திற்கு கற்றுணர்ந்த பண்டிதரும் கல்லாதாரும் ‘இனாம்’ ‘நன் கொடை’ என்று உரைசெய்வாரேயன்றி ‘ஒன்றைக்கொடுத்து மற் றொன்றைப் பெறுதல்’ அதாவது ‘பண்டமாற்றல்’ என்று ஒரு போதும் உரைசெய்யார் என்பதை வெகுமதியுள்ள தாங்கள் ஒப்புக்கொள்ளாமலிருக்கமுடியாது. ஆகையால் தாங்கள் சங்கச் செலவில் இனாமாகத் தங்க-வெள்ளி மெடல்களைக் கொடுக்கக் கட மைப்பட்டவர் என்பதற்கு ஐயமில்லை.

பிறகு, தங்கள் லிகிதத்தில் மற்றச் சங்கங்களின் வழக்கம் எனக்குத் தெரியாததால் பெறுவோர் செலவைக் கொடுக்கவேண் டுமென்பது புதிய வழக்கமென்று நான் நினைக்கிறதாக எழுதி யிருக்கிறீர்கள். முதலில் செய்த ஒழுங்கான தீர்மானத்தை மாற்றி, பிறகு அதினின்றும் பிறருக்கு இடையூறு உண்டாகும் வண்ணம் புதுத் தீர்மானம ஒரு சங்கத்தார் செய்திருக்கிறார்கள் என்பதற்கு அத்தாட்சி காண்பிக்க வல்லீரோ? அப்படிச்செய் திருப்பின் அச்சங்கத்தின் பெருமை என்னவென்று சொல்வது?

‘எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு’

என்றபடி மருந்து கண்காட்சி வைக்கும் தீர்மானத்தைத் தங்கள் ஆயுர்வேத வைத்திய மகா நாட்டில் ஒப்புக்கொண்டபொழு தன்றே ‘பொற்பூ’ ‘வெள்ளிப்பூ’ முதலியன பெறுவோரிடமிருந்து பணம் வசூலிக்கப்படும் என்னும் தீர்மானத்தைக் கொண்டுவந் திருக்கவேண்டும். அதை விடுத்து முன்றொன்று செய்துவிட்டு பிறகு யோசனையின்றி நினைத்தபடியெல்லாம் மாற்றிக்கொள்வது சங்கத்திற்குப் பங்கத்தை விளைவிக்கும் என்பது திண்ணம். ஆகவே, ஆயுர்வேத பாஸ்கரருக்கும், ஞானிகளுக்கும், யோகி களுக்கும் இவ்விஷயத்தை நான் வற்புறுத்திக் கூறவேண்டிய தில்லையென்று நினைக்கிறேன். சங்கத்தின் நன்மையைக் கருதி யும், ஏனையோர் நன்மையைக் கருதியும், சங்கத்தார் செய்த ஓர் தீர்மானத்தை மாற்ற நேரும் பக்ஷத்தில் முதலிற்கூடிய சங்கத்



தாரே அதை மாற்றத் திறமையுடையோராவர் என்பது யாவரும் அறிந்த விஷயம். நான் செப்டெம்பர் மாதத்திய தமிழ் வைத் தியக் களஞ்சியத்தைக் கண்ணுற்ற காலை முதலில் கண்காட்சிக்கு மருந்துகொண்டுவந்து வைத்த வைத்தியர்களுக்குத் தங்க வெள்ளி மெடல்கள் கோவிற்பட்டி தமிழ் வைத்திய சங்கச்செலவில்செய்து கொடுப்பதாகத் தீர்மானஞ்செய்த மகா நாடு வேறு, இதை மறுத்து மெடல் பெறுகிறவரிடம் பணம் வாங்கி மெடல் செய் தனுப்புவதாகத்தீர்மானித்த கூட்டத்தார் வேறு என்பதை உணரு கிறேன். ஆகவே இதில் ஓர் பெரிய மோசம் இருக்கிறதென நினைக்க இடமுண்டாகிறது. ஏனெனில் எக்காரணத்தைப்பற்றி மெடல் பெறுவோரிடம் பணம் வாங்கி மெடல்செய்து கொடுப்பது என்ற தீர்மானம் 2-வது கூட்டத்தாரால் செய்யப்பட்டது என்று ஆராய்ந்து பார்க்கப்புகின் முதலில்கூடிய மகா நாடு மெடல்கள் செய்து கொடுப்பதற்காக வைத்திருந்த பணத்திற்கு ஏதோ மோசம் வந்திருக்கவேண்டும் என்ற சந்தேகத்தினால்தான். அப் படிப் பணத்திற்கு மோசம் ஏற்பட்டிருந்தால் மெடல் பெறுகிற வர்கள் பணம் சங்கத்திற்கு அனுப்பி மெடல் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது ஒருவாறு நியாயமென்று ஒப்புக்கொள்ளலாம். அத்தன்மையாயின் என்னை தங்க மெடல் செய்துகொடுப்ப தற்காக அனுப்புவிக்கச் சொன்னபடி ரூ. 31 அனுப்பச் சித்த மாயிருக்கிறேன். அப்படி மோசம் இல்லாவிடில் தாங்கள் சங்கச் செலவில் எனக்குத் தங்கமெடல் செய்து கொடுக்கவேண்டியது அவ சியம். அப்படியுமின்றித் தாங்கள் வாளாவிருந்தீர்களாயின் தங் களையும் தங்கள் தீர்மானங்களையும் நியாயஸ்தலத்திற்கு அழைக்க நேரிடும் என்பதை நான் வற்புறுத்திக் கூறுகிறேன்.

தாங்கள் எவ்வளவோ அரியபெரிய விஷயங்களை உலக அனு பவத்தில் உணர்ந்தவராயிருப்பினும், கல்வி அறிவிலும் ஒழுக்கத் திலும் சிறந்தவராயிருப்பினும்

‘சுடர் விளக்காயினும் நன்றாய் விளக்கிடத்
தூண்டுகோ லொன்று வேண்டும்’

என்பதற்கிணங்க தாங்கள் தெரிந்தோ தெரியாமலோ, செய்த தவறுதல்களை எடுத்துக் காட்டவேண்டுமென்னும் எண்ணத்தினாலும் சங்கத்திற்கு இழிவு ஏற்படக்கூடாதென்ற எண்ணத்தினாலும் இவ்வாறு எழுதத்துணிந்தேன். இப்படி நான் எழுதிய யாவையும் நியாயமென்று ஒப்புக்கொண்டு எனக்கும் என்போன்றவர்களுக்கும் தங்க மெடல் வெள்ளி மெடல் சங்கச் செலவில் கூடிய சீக்கிரம் செய்துகொடுப்பீர்களென்று நம்பும் தங்கள்,

ம. அ. ஷம்சுத்தீன் சாகிப்.
24—9—21.

ஆகையால் என்போன்ற ஷெடி கண்காட்சியில் மெடலுக்குரிய நண்பர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில், மெடலைச்செய்து நாமே அணிந்துகொள்வது கௌரவத்தைக் கொடுக்காது என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. நியாயத்தை அனுசரித்து நீங்களும் சங்கச் செலவில் மெடல் செய்துதரும்படி பிரயாசைப்படுவீர்கள் என்று நினைக்கிறேன்.

ஹக்கீம் ம. அ. ஷம்சுத்தீன் சாஹிப்,
2-10-21. முனிசிபல் கவுன்சிலர், மாயவரம்.

---

உ

# ஐயுறவிது?

மக-ள-ள-ஸ்ரீ வைத்தியக் களஞ்சியம் பத்திராதிபர்
திருவாளர் அவர்களுக்கு

1. ஆண் பெண் இருபாலார்களுக்கும் ஒரே மாதிரியான தேக அமைப்பு உண்டாயினும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சிற்சில அவயவங்கள் பேதாபேதங்கள் இருப்பினும் நாடி விஷயத்தில் ஆண்களுக்கு வலது கையில் பார்க்கிற வழக்கம். நம முன்னோர்கள் காலந்தொட்டு நாளதுவரையில் நடந்துவருகிறது. பெண்களுக்கு இடதுகையில் நாடிபார்த்து வருகிறது. ஏன் பெண்களுக்கு வலது கையில் பார்க்கக்கூடாது என்பது? தங்க



பத்திரிகையில் விரிந்த நோக்கத்துடன் எனது சந்தேகத்தை நிவர்த்திசெய்யும்படி தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

2. தங்களால் நடத்தப்படாநின்ற அருமைவாய்ந்த பத்திரிக்கையில் நாடியின் விஷயத்தில் அற்புதமாக விளக்கப்பட்டிருந்தமையால் இந்த விஷயத்தை தங்களது பத்திரிக்கையில் மற்றும் வைத்திய சிகாமணிகளும் தெரிவிப்பார்கள் என நம்பி இதைக் கேட்கத்துணிந்தேன்.

இங்ஙனம்,
தங்கள் வணக்கமுள்ள,
கரூர் மா. தருமலிங்கம்,
5—10—1921. கரூர்.

---

# மூலம்

21-வது பக்கத்தொடர்ச்சி.

## தைலம்.

கரிப்பான் சார்படி ¼; மொடக்கற்றான்சார் படி ¼; மிதிபாகல் சார் படி ¼; முள் முருங்கை இலை சார்படி ¼; காட்டாமணக்கு சார்படி ¼; கழுதை லத்தி சார்படி ¼; கழுதை மூத்திரம் படி ¼; ஆகப்படி 1¾.

மூன்றரைப்படி சித்தாமணக்கு முத்தை இளநீர் படி 6-ல் அவித்து படி 2 ஆக வற்றியபின் எடுத்து இடித்து காயவைத்து ஷெடி முத்தை அவித்து மிச்சமிருக்கிற இளநீர் படி 2; சுத்தத் தண்ணீர் படி 6; புளித்த காடி படி 4, மேலேகண்ட பச்சிலை கழுதை லத்தி மூத்திரம் படி 1¾-ம் கலந்து அதில் இடித்துவைத்திருக்கிற கொட்டை முத்தைப் போட்டுக் காய்ச்சி எண்ணெய் எடுத்துக்கொண்டு 2 களஞ்சி வெள்ளைக் கற்கண்டை ஷெடி எண்ணெயிலிட்டு அரைத்து உருட்டி காலை மாலை சாப்பிட்டுவந்தால் நவமூலங்களுந் தீரும்.

மூல ரோகத்துக்காக சொல்லப்பட்டிருக்கும் மருந்துகள் தமிழ் மருத்துவ நூற்களில் நூற்றுக்கணக்காகச் சொல்லப்பட்டிருக்கின்றன. முதல் சஞ்சிகையில் சொல்லியிருக்கும் மருந்துகளும் இதில் சொல்லியிருக்கும் மருந்துகளும் அனுபவ சித்தி பெற்றவைகளிலுள்ளவைகள்.

மூலங்களை காரக் கயிற்றாற் கட்டி மூலம் அழுகிவிடும்படி செய்து புண்ணாற்றுமுறைகள் பல உள. அவைகளில் ஒரு முறையை மட்டும் இங்கே எழுதுகிறேன்.

சிணுக்காரம் களஞ்சி 2, சிவப்புக் காசிமண் களஞ்சி 1, பருத்திப்பருப்பு களஞ்சி ½ இவைகளைத் தண்ணீர்விட்டரைத்து நூல்கயிற்றில் பூசி மூலத்தைக் கட்டினால் அழுகிவிழும்.

மூலம் விழுந்த பின்பு புண்ணாற்ற முதலில் சோறும் தயிரும் பிசைந்து கட்டவேண்டும்.

2-வது கத்தாளஞ்சோறுந் தயிரும் பிசைந்துகட்டவேண்டும்.

3-வது பாலில் களிக்கிண்டி வைத்துக்கட்டவேண்டும். புண்ணாறிவிடும். மூலத்துக்கு கயற்கட்டுஞ் சிறந்த முறைகளில் இது ஒன்று.

வைத்திய ஆசிரியர் உ. சி. ப. மய்யதீன் இராவுத்தர்.

---

தமிழ் வைத்திய களஞ்சிய முதல் சஞ்சிகையில் நான் "எனது நோக்கம்" என்று எழுதியிருக்கும் தலையங்கத்தின் "தமிழ் சித்த வைத்திய சங்கத்திலிருந்து புத்தகமாகவும் துண்டு தாள்களாகவும் வெளியிடப்பட்ட 7 அறிக்கைகளைப்பற்றி யெழுதி இருப்பதைக் கண்டு அவைகளை அனுப்பும்படி பல நண்பர்கள் கேட்கின்றனர். அவைகளில் சில காப்பிகளே சங்கத்திலிருக்கின்றனவாகையால் தமிழ் வைத்தியக் களஞ்சியத்தைப் பார்க்கின்ற எல்லா சந்தா நேயர்களுக்கும் பயன்படுமாறு அவைகளை மேல்படி தமிழ் வைத்தியக் களஞ்சிய பத்திரிகையில் பதிப்பித்துவரத் தீர்மானித்து தமிழ் சித்தவைத்திய சங்கத்திலிருந்து முதலாவது வெளியிட்ட துண்டுதாள் அறிக்கையை வெளியிட்டிருக்கிறேன். மற்றவைகளையும் தொடர்ச்சியாக பதிப்பித்துவிடுகிறேன்.



# தமிழ்நாட்டு வைத்தியர்களே கண்விழியுங்கள்

ஐயன்மீர்,

நம்முடைய திராவிட வைத்திய சாஸ்திரத்தின் அருமையும், பெருமையும், சொல்லப்புகுந்தாற் பெரும் புத்தகமாய்விடும். நம் தமிழ்நாட்டு அபிமானிகட்கும் நம் வைத்தியத் தொழிலாளர்கட்கும் அதனருமையும், பெருமையும் தெரிந்தேயிருக்கிறது. ஆரியர் முதலிய ஜாதியார் இந்தியாவுக்குள் வருவதற்கு முன்னமே நம் திராவிட வைத்தியம் நம் தேசத்திலும் இலங்கை, பர்மாவிலும் பரவி எவ்வித சோதனைகட்கும் நிலைநின்று இத்தேசங்களில் இந்நாள்வரை தேசவைத்தியமாக நடைபெற்றுவருவதே அதன் மகத்துவத்தைக் காட்டும்.

"பெருமையுஞ் சிறுமையுந் தான்றாவருமே"

என்றபடி, நம் வைத்திய தொழிலாளர்கள் முயற்சிக்குறைவாலும் நம் நாட்டுப் பிரபுக்கள் நவீன நாகரிகத்தைக் கைக்கொண்டு தங்கள் வைத்திய முறைகளுக்கு ஆதரவு செய்யுங்கடமையை மறந்துவிட்டமையாலும் நம் வைத்தியத் தொழிலாளர் பெருமையும் நம் வைத்திய சாஸ்திரப்பெருமையும் தற்காலம் மாசுபடர்ந்து காணப்படுகிறது. இம்மாசைநீக்கி அதன் பிரகாசத்தை வெளிப்படுத்தவேண்டிய பொறுப்புவாய்ந்த வைத்தியத் தொழிலாளரும், தமிழ்நாட்டபிமானிகளும் இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தங்கள் வைத்திய சாஸ்திரத்தின்மேல் மாசு படர்ந்திருப்பதைப் பரிகரிக்காதிருப்பார்களோவென்று பிறர் எண்ணும்படி யாதொரு முயற்சியுமின்றி எதுவரையிருப்பார்களோ? அழுதழுதும் பிள்ளை அவள்தான் பெறவேண்டுமென்றபடி நம்முடைய குறைகளை நாமே நிவர்த்திசெய்ய முற்படவேண்டும். நம் சகோதர ஆயுர்வேத வைத்தியத்தை (சமஸ்கிருத பாஷையிலுள்ள வைத்

தியத்தை விருத்தி செய்வோர் ஆதியில் தங்கள் அகில பாரத ஆயுர்வேத வைத்திய சங்கத்தை வட இந்தியிலுள்ள பிருகையில் ஸ்தாபித்திருந்ததை இப்போ இரண்டு வருடக்காலமாய் சமஸ்கிருத பாஷா ஞானமும் அவ்வாயுர்வேத வைத்திய உணர்ச்சியும் பரவாத நம் நாட்டுத் தலைநகரமான சென்னைக்கு மாற்றி ஆயுர்வேத வைத்தியத்தை தமிழ்நாட்டில் பரப்புவதற்குரிய முயற்சிகளை வெகு பலமாய்ச் செய்துவருகிறார்கள். திராவிட வைத்தியத் தொழிலாளராகிய நாமோ உள்ள பெருமையையும் கைவிட்டிருப்பது இழிவன்றோ? நம்முடைய தொழிலின் உயர்வுக்குந் தாழ்வுக்கும் நாமே உத்திரவாதியென்பதையுங்கூட மறந்துவிட்டோமல்லவா? இனியாவது விழித்தெழும்புங்கள்.

லோகோபகாரமாக, நமது அநாதிகால வைத்திய சாஸ்திரங்களை சீர்திருத்தஞ்செய்து வெளியிட்ட சித்புருடர்கள் நோக்கத்தை பூர்த்திசெய்யாதிருந்துகொண்டு, அவர்களால் வெளியிட்ட சாஸ்திரங்களின் தொழிலாளிகளாக நம்மைச் சொல்லிக் கொள்வது என்னே? நமக்கு அப்பெருமை பொருந்துமா? நம்முடைய வைத்திய சாஸ்திரங்களுக்கும், முறைகளுக்கும், தொழிலுக்குந் தற்காலம் சோதனைகாலமாயிருப்பதை யுணர்ந்தாவது நம் வைத்தியத்தொழிலின் மகத்துவத்தைப் பிரகாசப்படுத்த முன்வந்து ஒற்றுமைக்க வேண்டுகிறோம்.

நாம் தனித்தனி வைத்தியத்தொழிலைச்செய்து பலனடைவதைவிட ஒற்றுமைப்பினால் அதிகப் பலனைப் பெறலாமென்பது அனுபவ பூர்வமாய் அறிந்த விஷயம்.

நாம் ஒன்றுசேர்ந்து நம் வைத்தியத்தொழிலை பிரபலப்படுத்துவது கூடாதென்று மலையவேண்டாம். அப்படி என்று வந்துதான் பிரகு. உலகத்தில் ஒவ்வொரு விஷயமும் படிப்படியாக முன்னுக்கு வந்திருக்கிறதேதவிர ஒரே தடவையாக எந்த காரியமும் முன்னுக்கு வரவில்லை. ஆகவே ஆழத்திற் புதைந்து கிடக்கும் நம் வைத்திய முறைகளை அதன் அபிமானிகள் ஒன்று



கூடி எடுத்து வெளியில் வைப்போமானால் நமக்குப்பின்வரும் சந்ததியார்கள் அதை படிப்படியாக உயர்த்தி உன்னத நிலைமைக்கு கொண்டுவருவார்கள். இப்படித்தான் உலகத்தில் ஒவ்வொரு தொழிலும் அதன் தொழிலாளர்களால் முன்னுக்கு வந்திருக்கிறது. உங்கள் கடமையை நீங்களே செய்யுங்கள் உங்கள் சந்ததிகளை உங்கள் கடமையை சுமக்கும்படி செய்யவேண்டாம். இப்படியே உங்கள் முன்னோர்களும் தங்கள் கடமையைச் செய்யாமல் உங்கள் பேரில் சுமத்தியபடியால் நீங்கள் நிர்வகிக்க முடியாமல் போய்விட்டீர்கள். ஆகையால் உங்கள் கடமையை நீங்களே செய்ய முற்படுங்கள்.

உலகத்தார் யாவராலும் விரும்பக்கூடிய தங்கக்கட்டியைக் கூடத் தன் கவனக்குறைவால் ஒருவன் இழந்துவிடுகிறதுபோல் நாமும் நம்முடைய கவனக்குறைவால் எல்லாச் சரீரிகளுக்கும் தேவையுள்ளதாகிய நம் வைத்திய முறைகளை இழக்கக்கூடிய தருவாயிலிருக்கிறோம். நம்மைச் சுற்றிசெய்யப்படும் இதர வைத்திய முயற்சிகள் நமது வைத்திய சாஸ்திரங்களையும், தொழிலாளர்களையும் நசுக்கிவிடப்பார்க்கிற இப்போதாவது விழித்தெழும்புங்கள். ஒன்று கூடுங்கள். சபைகளையும் சங்கங்களையும் ஏற்படுத்தி அதன் மூலமாய் நம் வைத்திய முறைகளை பிரபலப்படுத்துங்கள்.

நம் நாட்டு மன்னர்களும், பிரபுக்களும், மகா ஜனங்களும். வைத்தியத் தொழிலாளர்களும் ஒன்றுகூடி நம் ஜீவாதாரமான வைத்திய சாஸ்திரங்களையும் அவற்றின் தொழிலையும் முன்னுக்குக்கொண்டுவர ஓர் சபை ஏற்படுத்தி அதன் மூலமாய் முயற்சியெடுத்துக்கொள்ள வேணுமென்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறோம்.

இச்சத்காரியத்திற்குச் சாத்தியமானவரை ஊழியஞ்செய்ய ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம். இவ் வறிக்கையைக் கண்ணுறும் தமிழ்நாட்டு வைத்திய அபிமானிகள் தங்கள் அபிப்பிரா

பத்திரிகை மூலமாகவாவது கடிதமூலமாகவாவது நேரிலாவது தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

கா. பு. ம. காதிருமுகைதீன் இராவுத்தர்,
தமிழ்நாட்டு வைத்தியர், பேட்டை.

உ. சி. ப. மெய்யதீன் இராவுத்தர்,
தமிழ்நாட்டு வைத்தியர், பேட்டை.

மாவடி ஷண்முகம் பண்டிதர்,
திருநெல்வேலி.

இதை வைத்தியர்களுக்கும் வைத்திய அபிமானிகளுக்கும் அனுப்பப்பட்டன. விருதை சிவஞானயோகி அவர்கள் இந்த துண்டுத்தாளைப் பார்த்துவிட்டு அடியிற்கண்ட கார்டை யெழுதினார்கள்.

கோவில்பட்டி.
ஐயா, 6—12—20.

தாங்கள் விடுத்த தமிழ் வைத்தியத்தைப்பற்றிய துண்டுத் தாள் கிடைத்தது. தங்கள் கருத்துக்கு யானும் உடன்படுகின்றேன். முன்னமே பல வேலை செய்தும் வருகிறேன். தமிழ் வைத்தியத்துக்காக சென்னை, பூனா, அலகாபாத் முதலிய வைத்திய எக்ஸிபிஷன்களில் மெடல் சர்டிபிகேட் வாங்கி இருக்கிறேன். போய்ப் பிரசங்கம் செய்திருக்கிறேன். இப்போது சென்னை திராவிட ஆயுர்வேத சம்மேளனத்துக்கு வைஸ் பிரசிடெண்டாயிருக்கிறேன். ஆயினும் தமிழ் வைத்தியத்திற்குத் தனிச்சபை பத்திரிகை ஏற்படுத்த ஆசையுண்டு. முதலில் இந்த ஜில்லாத்தமிழ் வைத்தியர்களனைவருக்கும் நோட்டீசு கொடுத்துக்கூட்டுவோம். அக்கூட்டத்தில் தக்க ஏற்பாடு செய்வோம். தங்கள் நோட்டீசை எல்லவருக்கும் அனுப்புங்கள். நேரில் காணும்போது மற்றவை.

ஒப்பம்
வி. சிவஞானயோகி

---

# வைத்தியச் சுவடிகளின் பெயர்கள்

சென்ற சஞ்சிகையில் என்னிடமுள்ள அகத்தியர் நூற்களைப்பற்றி எழுதினேன். மற்றச் சித்தர்கள் நூல்களில் என்னிடமுள்ள நூற்களை இதனடியில் எழுதியிருக்கிறேன்.

**தேரையர்**

தனிக்குணம் 2000
வைத்தியம் 80
* வைத்தியம் 100
* வைத்தியம் 500
* வைத்தியம் 1000
* வைத்தியம் 1500
* கரிசல் 300
* பெருங் கரிசல் 600

**புலத்தியர்**

வைத்தியம் 800
உபதேச கர்மகாண்ட சூத்திரம் 300

**காகபுசுண்டர்**

வைத்தியம் 80
உபதேசம் 32

**மச்சமுனி**

வைத்தியம் 83
நிகண்டு 100
வேதாந்தம் 800
தண்டகம் 100
வைத்தியம் 800
ஞானம் 800
சூத்திரம் 82
பெருநூல் 80

**நந்தீசர்**

கருக்கடை 800
வைத்தியம் 100
சூத்திரம் 500
நிகண்டு 300

**கருவூரார்**

வெண்பா 31
பூசாவிதி 31
கொண்டிசிந்து 300
சூத்திரம் 116
தீட்சைவிதி 51
தசதீட்சை 25
பலதிரட்டு 300

**திருமூலர்**

தண்டகம் 100
கருமானம் 84
சகலகலைக்யானம் 200
சிராயவெண்பா 60
ஆராதார கட்டளை 40
சூத்திரம் 180 தத்துவம் 200
கருமான சுருக்கம் 50
தீட்சை 51
திருமந்திரம் 1300
பூசிகை தைலம் 30

**சுந்தரானந்தர்**

வைத்தியம் 600
அசபநூல் 33
கேசரி 100
வைத்தியம் 110
ஷை. 33
அதீதம் 36

திருமந்திரம் 50
சுண்ணம் திராவகம் 100
சூத்திர கருமானம் 50
சூத்திரம் 55
தீட்சை 25
சூத்திரம் 25
அதீதகடை சூத்திரம் 73
ஞானம் 13
ஆனந்தக்களிப்பு 50
வேதாந்த தத்துவம் 100
தண்டகம் 100
கரும நிவர்த்தி 50
சூத்திரம் 26

போகர்

*வைத்தியசத்தகாண்டம் 7000
*சறக்கு வைப்பு 800
*வைத்தியம் 700
சூத்திரம் 68
வைத்தியம் 27
ஷடி 40
ஷடி 51
பட்சிமாரணம் 9
உப்புளி விபாம் 60
சமாதி 50
வைத்தியம் 300
பூசாவிதி 52
வாகம் 700
சாஞால் 37
வைத்தியம் 8
பூரண சூட்சம் 51

லக்ஷ திரட்டு 100
வழலை 51
குருநூல்பட்டி 50

ரோமரிஷி

வைத்தியம் 500
ஷடி 100
ஷடி 25
முன் 16
பின் 16
வைத்தியம் 19
ஞானப் பூட்டு 14
உப்புக் கட்டு 25
*சிக்கி 100

கோரக்கர்

வாதம் 100
வைத்தியம் 200
ரணசாத்திரம் 200
வைத்தியம் 60
அட்டகர்ம சூத்திரம் 100
கும்மி 7

கொங்கணவர்

வைத்தியம் 41
குருமுறை 3
கர்பம் 100
சறக்குவைப்பு 100
* நடுக்காண்டம் 1650
கடைகாண்டம் 1560
முதற்காண்டம் 500
சிவகலை 56
பிறமானந்த உற்பத்தி 21



அதிசய சூத்திரம் 27
வாதகற்பம் 51
சோதிநூல் 40
சூத்திரம் 40
கற்பநூல் 51
வழலை 40
ஊஞ்சல் 7
வெண்பா 49
சர்ப சூத்திரம் 51
தேங்காய் சூத்திரம் 100
தீட்சை 100
சமாதி 51

தட்சணாமூர்த்தி

மறைபொருள் 50
பரிபூரணம் 1200
வைத்தியம் 1000
ஷடி 36
முப்புசாத்தி 12
ஷடி 10
ஷடி 8
பூரணம் 16

பிரமமுனி

வைத்தியம் 380
ஷடி 51
ஷடி 100
முப்பு 100
சறக்குவைப்பு 100
வைத்தியம் 27

இராமதேவர்

தண்டகம் 100

வைத்தியம் 80
ஷடி 500
ஷடி 1000
பச்சணி 110
கருக்கடை சூத்திரம் 500
வைத்தியம் 800-ல் பாட்டு 75
பலதிரட்டு 216
பச்சணி 100
வித்தை 50
கருமானம் 50
வைத்தியம் 200
பரிபாஷை 40
சூத்திரம் 50
ஷடி 10

சட்டமுனி

வைத்தியம் 200
மறைபொருள் 51
கற்பம் 100
சூத்திரம் 51
சூத்திரம் 100
* நிகண்டு 1200
ஞானம் 100
யோகம் 100
சடாசரகோவை 100

சுப்பிரமணியர்

ஞானம் 100
ஷடி 200
ஷடி 500
அகத்தியருக்கு உபதேசம் 33
குருபரீதானம் 1500

ஷெடி 30
ஷெடி 16
ஷெடி 8
ஷெடி 5

சூதமுனி
நாடி 27
வைத்தியம் 200
ஷெடி 110
ஷெடி 51
வகார சூத்திரம் 100
தீட்சை விதி 30

உரோமரிஷி
சூத்திரம் 16
வைத்தியம் 51

சிவவாக்கியர்
வகாரம் 51
சூத்திரம் 100
தீட்சை 51
சமாதி 30
*நாடி சாஸ்திரம் 16

சங்குமுனி
வைத்தியம் 100

கமலமுனி
வைத்தியம் 64
சூத்திரம் 36
திராவகம் 51
மறைப்பு 21

இடைகாடர்
வைத்தியம் 65
உடலறிவிளக்கம் 67

சுந்தராநந்தர்
வைத்தியம் 50
வைத்தியம் 8

கூர்மாநந்தர்
வைத்தியம் 50

கசைப்பிள்ளை
ஞானம் 120
கண்டகம் 100

வசிட்டர்
சூத்திரம் 206

தன்வந்திரி
வைத்தியம் 500
ஷெடி 200
வைத்தியம் 1000
மாந்திரியம் 500

சிவன்
ஆருடம் 100

புலிப்பாணி
வைத்தியம் 500
வைத்தியம் 50

சத்தி
ஆருடம் 120
புவனைசக்கிசம் 80

அகப்பேய்சித்தர்
வைத்தியம் 100

கௌதமர்
ஞானம் 100
நாடி 20

வசிட்டர்
வைத்திய சூத்திரம் 206

சௌபாக்கியர்
கண்டகம் 100

இவைகள் என்னிடமுள்ள ஏட்டு பிரிதிகள் இவைகளி * அடையாளமிட்ட சாஸ்திரங்கள் சமீபத்தில் அச்சேரி வெ வந்துவிட்டது. இது தவிர இதிற் காட்டாத அச்சுக்கு வந் பல வைத்திய நூல்களுமிருக்கிறது.



தமிழ் வைத்திய நூல்களை வைத்திருக்கும் புண்ணியவான்கள் தங்களிடமிருக்கும் நூல்களுக்கு அட்டவணை எழுதி அனுப்புவார்களானால் நமது வைத்திய நூல்களின் இவ்வளவு நூல்கள் காக்கப்பட்டு வருகிறதென்று தெரியவரும். அந்த நூல்கள் வழியாய் இன்னின்ன நூல்கள் தவறிவிட்டதென்றும் அறியலாம்.

தமிழ் உலகத்திற்கு பெருபகாரம் புரிந்த பலனும் கிடைக்கும். நூல்கள் வைத்திருப்போர்கள் வெளியிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

வைத்திய ஆசிரியர் உ. சி. ப. மய்யதீன் இராவுத்தர்.

---

குறிப்பு. முதல் சஞ்சிகை 5-வது பக்கம் "தமிழ் அகத்தியனார்" என்று மகுடமிட்டு எழுதப்பட்டிருக்கும் வியாசம் 26-4-21-ல் திருநெல்வேலி இந்து கலாசாலையில் நடந்த தமிழ் வைத்திய மகாநாட்டில் செய்யப்பட்ட பிரசங்கத்தின் ஒரு பாகம். பிரசங்கம் நடந்தபோது அங்கு இருந்த எவரும் மறுக்கவில்லை. வெளியிடப்படாத மற்றப்பாகம் இதைவிட அதிகமாய் மத விஷயத்தில் தலையிடுவதால் அதைப் பிரசுரியாமல் நிறுத்திவிட்டேன்.

மேற்கண்ட வியாசம் தமிழ் வைத்திய மகாநாட்டில் பிரசங்கம் செய்யப்பட்டதாயும் "தமிழகத்தியனார்" வரலாறு சொல்லப்பட்டிருப்பதாயு மிருந்தபடியால் அதை வெளியிடும்படி நேரிட்டது.

தமிழ் வைத்திய முன்னேற்றமொன்றையே பிரதானமாகக் கொண்டு இப்பத்திரிகை நடத்தப்பட்டுவருகிறதேதவிர மற்ற வியாசங்களில் பிரவேசிப்பது இதின் கொள்கையல்ல.

எந்த மத விஷயத்தைப்பற்றியும் அம்மத பெரியோர்களைப் பற்றியும் எக்காரணத்தையிட்டும் இப்பத்திரிகை வெளியிடக் கடமைப்பட்டிருக்கவில்லை. அது ஒரு மதத்துக்கும் மற்றொரு மதத்துக்கும் ஒரு மதப் பெரியோர்களுக்கும் மற்றொரு மதப் பெரியோர்களுக்கும் பாகுபாடு காட்டியுள்ள பதங்களும் இடையிடையே கலந்துவரும் பிரசங்கத்தின் ஒரு பகுதியை வெளியிட்டதற்காக நான் மிகவும் விசனப்படுகிறேன்.

இனி இப்படிப்பட்ட வியாசங்கள் பிரசுரிக்கப்படமாட்டாது.

பத்திராதிபர்.

# வைத்திய அகராதி

## கூட்டப்பெயர் தொகுதி

### அரிசி 6

வெப்பாலரிசி, பெருஞ்சீரகம், சொத்தபல்லி, உளுவையரிசி, கார்கோகரிசி, விளாவரிசி.

### மலர் 10

முடக்கற்றான், இலப்பனை, கரிப்பான், சிகேசி செங்கழுநீர், எழுத்தாணி பூடு, அறுகு, தாளி, தொட்டால்வாடி, சிறுபூளை, விட்டுணுகிராந்தி.

### நாவி 5

பச்சநாவி, ருத்திரநாவி; கருநாவி, இருளி, நெரிவிசம்.

### பேதிச்சரக்கு 5

நேர்வாளம், சிவதை, கடுக்காய், ஆமணக்கு, நிலவாகை.

### காரம் 5

வெங்காரம், சவுக்காரம், சீனிக்காரம், சிரிகாரம், படிகாரம்.

### சாரம் 5

நவச்சாரம், எவச்சாரம், உமிரிச்சாரம், சத்திச்சாரம், அம்பலசாரம்.

### கள்ளி 5

இலைக்கள்ளி, கொடிக்கள்ளி, திருகுகள்ளி, பலகைக்கள்ளி, நாகக்கள்ளி.

### இந்திரியம் 5

வேர்வை, மூத்திரம், உமிழ்நீர், மலம், இந்திரியம்.

### வாசம் 10

ஏலம், தக்கோலம், இலவங்கம், கிரும்பு; சாதிக்காய், சிறுநாகப்பூ. வால்மிளகு, செண்பகப்பூ, பூலாங்கிழங்கு, வங்காளப்பச்சை.

### கிழங்கு 5

பிறண்டை கிழங்கு, கார்த்திகை கிழங்கு, புளிசடலை கிழங்கு, மரல் கிழங்கு, கருணைக்கிழங்கு.

### விறைவாசம் 5

சந்தனம், அகில், தகரம், குங்குமம், கொட்டம்.



மடிக்குமிடா வின்கண் மனையில் நடுவேகேள்
குப்பி பதித்தக் குணமா மணலிட்டுக்
கப்பியதை மூடிக் கண்டுவிடு—செப்பியரோ
தீவாக் கினிசாமந் தென்றதன்பின் காற்சாமம்
தாவாக்னி காற்சாமந் தாக்கியெரி—தாவாக்னி
பூசையிட்டு வாலைப் பொருக்குஞ் சிமிழிலிட்டுப்
பாசையனும் பானத்தில் பாய்ச்சக்கேள்—காசமிட்ட
சன்னியுடன் தோடம் சகருஞ் சுரவகன்பித்தம்
அன்னியமி லேற்ப மகற்றிடும்—என்னவெனில்
இந்திரியுடன் சாற்றிடுவர்ளே எத்தப் பணவிடைதான்
வந்தியரே சோகை மடித்திடுமே—கொஞ்சம்
திசைமூலத் திட்டால் சிணக்கறசு வாய்வு
அசைவிதுள்ள தோஷமெல்லாந் தாம்போம்—பசையில்லா
பத்தியமாம் காய்ச்சல் பருவிக்கம் பெய்பாறு
சத்தியமாய்த் தீருமிது தப்பாது—பத்தியமோ
இல்லையென்றார் மாமுனிவர்க் கேற்ற அமிழ்தமிதே
தில்லைநடே மாடி சிவன் 68.

---

### தாகத்துக்கு மகாசஞ்சீவி

நாவிதா னொன்று நல்ல திப்பிலி யொன்று
தாலிய வெங்கா ரமொன்று மூன்றையும்
நீலிய நிம்பழச் சாற்றி லரைத்திடு
கூலிய வுண்டை குன்றிப் பிரமாணமே 69.

குன்றிப் பிரமாணங் குறித்திடு முண்டையை
கன்றிப் பிரமாண நற்சீரகந் திப்பிலி
குன்றப் பிரமாணங் கொத்தமல் லியுடன்
நின்றப் பிரமாணஞ் சிற்று முட்டியே 70.

முட்டியுங் கூட்டி முன்சமன் சேர்த்துக்
கட்டிக் கியாழமாய்க் கண்டுநீ வைத்திடு
கெட்டிய வுண்டை யொன்றிடக் கேளுநீ
கட்டிய தாப சுரம்போக்குங் கண்டிடே 71.

கண்டிடுந் தாப சுரம்போக்கக் கேளுநீ
முண்டிடுங் காத்தாக்கு முதண்டக் கிராமம்

மண்டிடுந் தாப மருவிக்கடல் போகும்
கொண்டுநீபாரு கொடியசுரம் போமே

சுரங்கூடத்தாகஞ் சேர்ந்துகடல் போகும்
சிரங்கூட நீராய் நின்றிடும் பார்த்திடு
சிரங்கூடவிட்டுத் தீர்ந்துகடல் போகும்
அரங்கூடத் தாகஞ் சுரம்போக்குங் கண்டிடே

கண்டிய தோஷங் கறக்குங் கனதோஷம்
அண்டிய சிலேத்தும மதிதோஷம் போக்கிடும்
மண்டியதாக மகத்தாமது மேகம்
தண்டிய ரோகந் தீர்க்குஞ் சஞ்சீவியே.

## சிவயோக ஆனந்த வயிரவன்

தண்டிய அப்பிரேக ச்செந்தூரந் தானொன்று
மண்டிய சூத பற்பமது வொன்றுமே
கண்டிய கெந்தி கட்டும் பலமொன்று
அண்டிய வெங்காரமானது வொன்றே

ஆனதுலிங்க மன்பாய்ச்சரி சேர்த்துத்
தானது சுக்குத் தானொன்று சேர்த்திடு
மானது திப்பிலி வகையாய்ப் பலமொன்று
வீனது மிளகு விளங்கவே யொன்றிடே

ஒன்றிய வெச்சார மோங்கும் பலமொன்று
தன்றிய வகையெல்லாந் தான்சுத்தி செய்திடு
கன்றிக்கொடி வேலி கடியதனைத்திடு
அன்றியசாம மாறுமரைத்திடே

ஆறுமரைத்து அறுவானதன் டைமை
பாறுநிழலில் பருவமா யுலர்த்திடுச்
சாறுஞ் சிமிளிற் சூக்கியடைத்திடு
வசறு முண்டைக்கு மருவுமனும்பானமே

அனுப்பானத்திட்டா லாகாத சன்னிபோம்
தனுவதில்வந்த சன்னிவாதங்களும்
கொனிப்பானமான கொடிய சீதளங்களும்
சுனுப்பானமான சுரம்போக்குங்கண்டிடே



சுரம்போக்குஞ் சன்னி சுற்றிய பதின்மூன்றும்
சுரம்போக்கு மதிசாரம் கருவ ரோகங்களும்
சிரம்போக்கும் பிரமிய சிருமிய திரிகிட்டால்
காம்போக்கும் முன்னம் கண்டதிவாதிதே 80.

வாரி துரோசனி வகையாத் தயிலத்தில்
கூரிய குன்மம் குடிமேலெரும் பார்த்திடு
சாரிய ரோகஞ் சருவமும் மோடிடும்
சேரி தயிலம் விளங்கும் சிவானந்தமே 81.

சிவானந்தமான சிவசிந்தரும்
நவானந்தமான நாதாக்கள் வாக்குத்தால்
மவானந்தமான மடிந்திடும் ரோகங்கள்
தபானந்தமான தனித்த வயிரவே. 82.

## நவலோக வயிரவன்

வயிரியுமான வகையான காரம்
தயிரியுமான தான்பல மொன்று
வெயிரியுமான வெண்குளவி பலமொன்று
வயிரியுமான கெந்திபலம் நாலே 83.

காலான சூதம் கட்டிப்பலம் நாலு
கோலான கந்தக் கட்டிப்பலம் நாலு
சேலான திப்பிலி செறுத்தம் பலநாலு
வாலான மிளகு வருத்தகல் பார்த்திடே 84.

பார்த்திடலிங்கம் பணிரெண்டு சேர்த்ததை
வைத்திடவெல்லா மியங்காக அரைத்திடு
காத்திட்ட சிம்புச் சாத்தியின் சாறு
மாத்திடு மறுநாள் மகா இருசிக்காத்திடவே 85.

சாத்திலரைத்துத் தப்பாமே மறுநாள்
மாற்றிய கொடிவேலி மைத்தாக்கி பாலத்திற்
சேர்த்தியரைத்துத் தித்திடு மூன்றுடைபோல்
ஆக்கி புடைத்தி அகத்தியில் வைத்திடே 86.

வைத்திட்ட மூன்றுடை மைத்தாம் வீதக்கதில்
பத்திட்டபோது பதக்கு மகாசன்னி

எத்திட்ட வாதம் எரிகின்ற குன்மங்கள்
சத்திடச் சொன்னேன் தான்வாதம் போக்குமே

போக்குமேசேரு புகழான காசங்கள்
தாக்கும் பதின்மூன்று தப்பாது பார்த்திடு
பாக்குமிது ரோகம் பதின்காத மோடியே
காக்குள்தாரு நாற்பதும் போகுமே.

## சிரீமூர்த்தி ரசம்

போக்குஞ் சிரீமூர்த்திரசம் பொல்லாத சன்னியைத்
தாக்கும் பதின்மூன்றுந் தப்பாது கேட்டிடும்
வாக்குவசமும் மகாசன்னிக் கணுப்பானம்
நீக்கும்வகையு நிசமாகக் கேட்டிடே

கேட்டிடு வெளிமான் கொம்புப்பொடி வெட்டு
நாட்டிடும் புள்ளிமான் நற்கொம்பும் வெட்டு
கூட்டுநன்றவி குலமாக நாலு
காட்டுநற் கார்த்திகைக் கிழங்கது நாலே

கிழங்கொடு கூத நாலது சேர்த்து
அளங்கிய கெந்தியது வொன்றுபோடு
இளங்கிய கொம்பை பற்பமதாக்கி
அளங்கிய சரக்கை சுத்திகள் செய்யே

செய்திடுசுத்தி திடமதுவாகவே
வைத்திடு கல்வத்தில் மாட்டிபணக்கக்கேள்
கொய்திடுங் கொடிவேலிக் கியாழத்தி லேழுநாள்
நையவும் பார்த்து நானெழுதாவே

நாளது குன்றிப் பிரமாணமுண்டை
நீளவுஞ்செய்து நிழலிலுணர்த்தி
வாளது கொடிவேலி மகத்தாங் கியாழத்தில்
சாளதுவாக்குஞ் சன்னிவாறுண்டிட

உண்டையிலுலே யோடுமே சன்னிகள்
கண்டசுவாசம் கதித்தசன்னிவாதம்
சண்டையிட்டாப்போற் தளர்ந்தோடும் பாரு
கொண்டையிற் சன்னி குலைக்கும்வகை பாரே



பாரேசன்னி பதின்மூன்றுந்தீர
வாரோடிஞ்சி வகையிவிதுண்டை
மாரேயொன்று மாட்டியே விட்டால்
தாரேகசன்னி தார்ந்துபோம் காணே. 95.

## திரிநேத்திர ரசம்

நேத்திரிதாம்புரக நகடதுகொண்டு
மாத்திடும் பாலிலு நொய்யிலு மூறவை
மூத்திடு மூன்றுநாளது கழிந்தபின்
சாத்திய களிச்சி தானதிற்று வைத்திடே 96.

துலைக்கத்துலைக்க சுவதிப்போம் செய்பால்
தலக்கியதகடு தானெடு பலமொன்று
கலக்கியலுதம் கசக்துப் பலமணர
நிலைக்கவா கெந்தக நீட்டும்பலங்களே 97.

கேளடா நொச்சிக் கெடியான சாற்றினில்
காளடாவொன்று நலமாயரைத்து நீ
வாளடா கழிமண் குகைக்குலே வைத்து நீ
நீளடா மண்ணிலே நிலைப்பாகச் செய்திடே 98.

செய்யடா சீலை செயமாக மூனறுந்தான்
வையடா சட்டியில் மணலிட்டதின் மேலே
பையடா வைத்துப் பாச்சிடு மேல்மணல்
பொய்யடா மூட்டிப்புகழ் அறுசாமமே 99.

மூன்றுதுசாம முழங்க எரித்திடுங்
கான்றுதுசாமம் காங்கை தீதளமாய்
நான்றாக ஆறினல் நலமாக வாங்கிப்பார்
தோன்றுதுசக்தி கூறிய பற்பமே 100.

பற்பத்தில செல்லிடை பாச்சிடு வெற்றிலை
சிற்பத்தகாசம் நீடியபுளர்ரத்தை
அற்பத்திடைக்காத வாயுவுக்கெல்லாம்
சொற்பத்திலோடிச் சேர்ந்து கிடக்குமே 101.

சோர்ந்திடக்குஞ் சுகமான சன்னிகள்
சேர்ந்திடக்கு மகாதாக சுவாசங்கள்
சார்ந்திடக்குஞ் சகல துற்குணம்விட்டு
கூர்ந்திடக்குங் குலமான மூலமே

மூலவகையும் முத்தான பாண்டுவும்
தாலப்பெருவாசல் தாக்கிய ரோகமும்
மாலையிற்காசம் வகையாவும் போக்கிடும்
சாலப்பெருவிக்கத் தனேடும் பார்த்திடே

---

## சவுந்திராசம்

சன்னியுடன் வாதந் தலைவலியுங் கால்வலியும்
மன்னுஞ் சுகசன்னி மாறனுடன்—கன்னிமையே
அந்தி சுரமாற வன்பாய்ப் பதின்மூன்றும்
வெற்றி பெறத் தீரும் விருதுகட்டி—உற்றதொரு
சூதந்தா னொன்று தூயான கெந்தியொன்று
பாதை யரிதாரம் பலமூன்று—நீதமுடன்
ஒன்றாக்கிக் கல்லில்விட்டு உற்றஇஞ்சிச் சாறுவிட்டு
நன்றாக நீயரைத்து நாட்டக்கேள்—பொன்ற
மடக்கிட்டு கன்றுய்வை செம்புவட்டகையிற்
அடக்கிய மேல்மூடி தாம்போட்—டடக்கமதாய்
சீலைமண் செய்து செலுத்திய சட்டியிலே
பாலை மணலதிலே பாக்கிவிடு—கோல
அகல்வைத்து மண்விட்டு தீபாக்கினி அன்பாய்
கைவெட்டிச் சாமமெரித்து—செகமெச்ச
ஆறவிட்டுத் தானெடுத்து அன்பாய்ப் பொடிசெய்து
சாதிட்டுமீன் பிச்சிற்றுமொரு—காலுமி
வராகியுட பிச்சில் மயாவிடுவேறு
தராகியமா மேதியுட பிச்சில்—ஆராகிதமாய்
அல்லிபனை யொருநா அன்பாயுனார் காட்டின்
மெல்லியரே பிச்சிலொரு நாளுலார்த்தி—நல்லியல்பாய்
மத்தம் விளையும் வருசேவ கன்திழங்குஞ்
சித்தப் பிரண்டையுடன் தஞ்சாறு—மெத்தமெத்தப்
புங்கம்விளைகாரகொச்சி பூக்குமவிஞ்சிவிளை
பங்கமில்லா வெண்காக்க ணுன்விளையும்—பொங்கரட



பேய்த்தும்மட்டி வேரும் பெரியதுர சம்விளையும்
ஆயமினம் புளிச்சாறுடனவள்ளி—தாய்பளிச்சை
கையான் தகரை கணமிளகு வெங்காரம்
மையா திரிபலையும் வாலிஞ்சி—கொய்யான
வாளத்திரிகடுகு மாதளையின் பூச்சாறு
தாளவெள்ளைச் சாரணைவே ராமணக்கு—கேளீர்
சதிரக்கள் ளிப்பால் சாரணை நாயுரி
அதிருருவிலைக் கள்ளியுட னெய்து—இதமுடனே
ஒவ்வொன்றிலே யொருநாள் உண்மையுடனுணர்த்தி
நவ்வொன்றி நீவைத்து நாட்டக்கேள்—கவ்வுண்டை
இந்துசி தனிச் சாற்றிலிட்டிடவே செல்லிடைதான்
வஞ்சியரே தோஷமது வாராது—மிஞ்சினால்
நாக்குன்றிச் சாற்றிலிட நாடாது விட்டோடும்
சோக்குன்றிப்போகாதே சொல்லக்கேள்—நிக்கமில்லா
காச்சல்குளிரும் கனமான சன்னிகளும்
ஆச்சமுக சன்னியத்தலிடும்—வாக்குதிது
இந்தநூற் றன்னுலகில் எந்தை குகப்பெருமான்
சுந்தரமே சொன்னார்—துணிந்து. 104.

பஃறொடை வெண்பா முற்றும்

---

## வாத ராட்சதன்

நாவியொன்று கெந்தியொன்று நல்லகாந்த மொன்றுமா
ஆவியான அப்பிரேகமான பற்பமொன்றுமா
தாவியான தாம்பிரபற்பந்தானு நாலு கூட்டிடு
காவியான சரக்குமூன்றுங் கண்டுகத்தி செய்திடே 105.

சுத்தியாஞ் சரக்கையெல்லாஞ் சூழ்ந்தவெள்ளைச் சாரணை
பத்தியாக நீயரைத்துப் பாரும்பச்சமொன்றுமாய்
வெற்றியான அமுதமூலி வேறுஞ்சேர்த்துச் சாற்றிலே
ஒத்தியாகப பச்சமொன்று ஒங்கிரியரைத்திடே 106.

அரைத்துவாங் புச்சமொன்று ஆனசித்திர மூலமே
உரைத்துவாங்கு பேய்த்தும்மட்டி யுற்றசாற்றில் பட்டமாய்
நிரைத்துவாங்கு தோடகையில் நீருநாளுமொன்றமாய்
குரைத்துவாங்கு குகையிலிட்டுக் குறுகவாயை மூடிடே 107.

மூட்டிச்சிலை மண்கள்செய்து மூட்டளவு புடங்களைப்
பாடித்ததமானபின்பு பார்த்து நீயும் வாங்கிடு
நாடியங்கே கல்லிட்டு நல்ல இஞ்சிச்சாற்றினில்
ஆடிபாடிச் சாமநாலு மானவுண்டை செய்திடே 108.

செய்தவுண்டை இஞ்சிச்சாற்றில் சேரவைத்துக் கொண்டிடில்
மைதமான சர்வரோக நல்ல சன்னிநாசனம்
வெய்தமான சன்னிபாதம் வாதரோக நாசனம்
மைதமான காசமீளை மாண்டுநின்ற வாறிதே. 109.

## நவலோகபூபதி

வாறுகேளு குதமந்த வன்னிகெந்தமஞ்சமா
தாறுகேளு நாவியந்த சார்ந்தலோக மஞ்சமா
வேறுகேளு தாம்பிரமஞ்ச மேலுநாலு சத்திசக்
பாறுகேளு செருப்புச்சாற்றில் பத்திநின்றரைத்திடே 110

அரைத்தசாமம் பன்னிரெண்டு மானபின்புவாங்கிச்
விரைத்தவுண்டை குன்றிவிதம் மேவச்செய்துலர்த்தியே
பரைத்தவுண்டை காசிக்குப்பி பாதிமட்டுவிட்டுடு
திரைத்து மாக்கல்தன்னிலே நின்றவாயடைத்திடே 111

அடைத்துச்சிலையேழுசெய்து அகண்டசட்டிதன்னிலே
விடைத்துமண்பரக்கவிட்டு மேலேகுப்பிவைத்திடு
திடைத்தமணல் மேலுங்கொட்டி சேர்த்துக்குப்பிமூடிடு
படைத்தசாமம்பன்னிரண்டு பார்த்துக்காட்டெருவிடே 112

காட்டெருவிறுலே கமலமாயெரித்துவா
ஆட்டிமேத்தவேளைமட்டு மானபின்புகேளுநீ
மூட்டுந்தியுமாறவிட்டு குருகருக்குப்பூசைசெய்
ஊட்டுந்திக்குவிர்ந்தபின்பு வந்தவாறுவாங்கிடே 113

வாங்கிய [illegible] றுடைத்து வச்சிரமான கல்லிலே
தாங்கியிருஞ்ச [illegible] விட்டுச் சார்ந்தபக்ஷ மொன்றுமாய்
நீங்கிநோக்கிச் சா[illegible]ட்டு நின்றபட்ச மொன்றுபோல்
வாங்கியாறுத் ம[illegible] உற்றபக்ஷ மொன்றுமே 114

169987

செப்பனிடுபவர் பெயர்
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்.
செப்பனிட்டு முடித்த நாள்
துறையார்க்கும் ப.ஏ. கையொப்பம்.
அலுவலர் கையொப்பம்.